ஓம் ஸ்ரீ குருப்யோ நமஹ
ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர







ரிஷப ராசி

# நர்மதா மஹா புஷ்கர விழா அழைப்பிதழ்
# ஓம்காரேஷ்வர்
# (இந்தூர்-வழி)

**ஓம்காரம்**
**ஸ்ரீ கஜானன் மகராஜ் ஆஸ்ரமம்,**
**பக்திநிவாஸ் மம்லேஷ்வர் சாலை**
நர்மதை நதி, பிரம்மபுரிக்கரை வழி, ஓம்காரேஷ்வர், மத்திய பிரதேசம் 450554
தொலைபேசி : 094 2537 1204

**நர்மதா புஷ்கரம் – ஓம்காரேஷ்வர்**
**ஸ்ரீ குரோதி வருடம்**
சித்திரை மாதம் 18ஆம் தேதி (1-5-2024) புதன்கிழமை முதல்
சித்திரை மாதம் 29ஆம் தேதி (12-5-2024 ) ஞாயிற்றுக்கிழமை வரை



| | |
|---|---|
| अलक्षलक्षलक्षपापलक्षसारसायुधं<br>ततस्तु जीवजन्तुतन्तुभुक्तिमुक्तिदायकम् ।<br>विरञ्चिविष्णुशङ्करस्वकीयधामवर्मदे<br>त्वदीयपादपङ्कजं नमामि देवि नर्मदे ॥ | *அலக்ஷலக்ஷ லக்ஷ பாபலக்ஷ ஸார ஸாயுதம்*<br>*ததஸ்து ஜீவ ஜந்து தந்து புக்தி முக்திதாயகம் I*<br>*விரிஞ்சி விஷ்ணு சங்கர ஸ்வகீய தாம வர்மதே*<br>*த்வதீய பாதபங்கஜம் நமாமி தேவி நர்மதே II* |





## ரிஷப ராசி நர்மதா புஷ்கரம் – ஓம்காரேஷ்வர்

### ஸ்ரீ குரோதி வருடம்

சித்திரை மாதம் 18ஆம் தேதி (1-5-2024) புதன்கிழமை முதல்

சித்திரை மாதம் 29ஆம் தேதி (12-5-2024 ) ஞாயிற்றுக்கிழமை வரை


| சித்தாந்த ஸரளி ஸிக்ரந்தம்<br>ஸ்ரீ ஸ்கந்த புராணம் - ஸ்ரீ நாரத புராணம் | | |
|---|---|---|
| மேஷேஷச கங்கா,<br>விருஷபேச ரேவா,<br>மிதுனேது ஸரஸ்வதி,<br>கர்கடே யமுனா ப்ரோக்தா,<br>சிம்மே கோதாவரி ஸ்மிருதா, | கன்யாயாம்<br>கிரிஷ்ணவேனிசா<br>காவேரி தடகே ஸ்மிருதா ;<br>விருச்சிகே தாமிரபரணி சா ;<br>சாபே புஷ்கரவாஹினி,<br>மகரே துங்கபத்ரா, | கும்பே சிந்து நதி ஸ்மிருதா;<br>மீனே பரணீதா நதிசா;<br>குரோ சங்கர மனோஸ்மிருதா<br>புஷ்கராக்சோ முனிநாம் ஹி<br>ப்ரவேசோ உத்ர பூதே<br>ஸ்மிருதாஹ |



**ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்**

**ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்**

அவர்களின் பரிபூரண அனுக்ரஹத்துடன்





***ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் 70-வது பீடம்***

***ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்***

ஆக்ஞையின்படி அவர்களின் அனுக்ரகத்துடனும்

---



***ஸ்ரீஸ்ரீ வித்யா தீக்ஷ தீர்த்த ஸ்வாமிஜி,***
***உடுப்பி ஸ்ரீ பலிமாரு மடம்***

***ஸ்ரீஸ்ரீ விஷ்வ பிரசன்ன தீர்த்த ஸ்வாமிஜி,***
***உடுப்பி ஸ்ரீ பேஜவர் மடம்***



திருவாவடுதுறை ஆதீனம் 24-வது குரு மகா சன்னிதானம்
***ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்யா ஸ்வாமிகள்***

தருமபுர ஆதீனம் 27-வது குரு மகா சன்னிதானம்
***ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்யா ஸ்வாமிகள்***

திருப்பனந்தாள் காசிமடம் அதிபதி
***கயிலை மாமுனி ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துகுமாரஸ்வாமிகள்***

திருக்கைலாய ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம்
***வாமதேவ ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க பண்டார சந்நிதி ஸ்ரீ சிவகரயோகி ஸ்வாமிகள்***

வேளாக்குறிச்சி ஆதீனம்
***ஸ்ரீலஸ்ரீ சத்திய ஞான மஹாதேவ தேசிக பரமாச்சார்யா ஸ்வாமிகள்***

செங்கோல் ஆதீனம் 103-வது குரு மகா சன்னிதானம்
***ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சத்திய ஞான தேசிக பரமாச்சார்யா ஸ்வாமிகள்***

***ஸ்ரீஸ்ரீ சாந்தலிங்க மருதாசல அடிகளார்,*** பேரூர் ஆதினம்

***ஸ்ரீஸ்ரீ உமையொருபாகம் ஆதினம்***

***ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி,*** (Art of Living), பெங்களூரு

***ஸ்ரீஸ்ரீ சக்தி அம்மா நாராயணி பீடம்,*** வேலூர்

***ஸ்ரீஸ்ரீ இரத்தினகிரி பாலமுருகன் அடிமை ஸ்வாமிகள்***

***ஸ்ரீஸ்ரீ தன்வந்திரி பீடம் முரளிதர ஸ்வாமிகள்***

***ஸ்ரீஸ்ரீ காமாக்ஷி ஸ்வாமிகள், நங்கநல்லூர்***

&



***ஆகியோரின் அருளாசியோடும் நடைபெறும் புஷ்கரத் திருவிழா.***

பேரன்புடையீர்,

புஷ்கர விழா நதிகளை போற்றி வணங்கும் ஒரு திருவிழாவாகும். ப்ராசீனமான 12 புனித நதி தீரங்களில் இருக்கும் ஆலயங்களில் இது கொண்டாடப்படுகின்றது. அவ்வமயம் பித்ரு பூஜைகள், ஆன்மீக சொற்பொழிவுகள், பக்தி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடந்தேறும்.




புஷ்கரத் திருவிழா ஒவ்வொரு வருடமும் குரு பகவான் ஒரு ராசியில் இருந்து இன்னொரு ராசிக்கு இடம் பெயரும் பொழுது அந்தந்த ராசிக்குரிய நதிகளில் நடைபெறும் விழாவாகும். சிருஷ்டியில் இருக்கும் மூன்றரை கோடி தீர்த்தங்களுக்கும் அதிபதி ப்ரம்மா. அவற்றினுள் ஒரு சில தீர்த்தங்களுக்கு நம் புராணங்கள் புஷ்கர விசேஷத்தை நிர்வகித்துள்ளன.

ப்ரம்மவின் கமண்டலத்திலுள்ள புஷ்கரமான குரு பகவான், குரு பெயர்ச்சி சமயங்களில் அந்தந்த ராசிக்குரிய தீர்த்தங்களில் பன்னிரெண்டு நாட்கள் பிரவேசம் செய்து, வாசம் செய்வதாக ஐதீகம். இந்த புஷ்கர புண்ணிய காலத்தில் மும்மூர்த்திகளும், தேவர்களும், ரிஷிகளும், அந்தந்த தீர்த்தங்களுக்கு வந்து நீராடி மகிழ்வதாகவும் நம்பப்படுகின்றது. எனவே இந்த புஷ்கர காலங்களில் அந்தந்த நதிகளில் நீராடுவது மூன்றரை கோடி தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணியத்திற்கு நிகரானது.

ஜோதிட ரத்னா கோழிகுத்தி ஸ்ரீ M.S.வரதராஜ பட்டாச்சாரியார் D.Astro (9787213226) திருக்கணித பஞ்சாங்கத்தின் படி கணித்தது - வருகின்ற மே 1, 2024 அன்று நிகழும் குரு பெயர்ச்சி ஒவ்வொரு இராசிக்காரர்களுக்கும் நல்கும் நல்லன, அல்லன பயன்கள். பரிகாரங்களுக்கு பெரியோர்களை கலந்து ஆலோசிக்கவும்.

<table>
<tr>
<td>மீனம் 3<br>திருத்திய குரு<br>முயற்சிகளில் தடை<br>ஏற்பட வாய்ப்பு உள்ளது</td>
<td>மேஷம் 2<br>குடும்பகுரு நன்மை</td>
<td>ரிஷபம் 1<br>ஜென்மகுரு வீண்<br>அலைச்சல்</td>
<td>மிதுனம் 12<br>விரையகுரு<br>பணமுடக்கம்</td>
</tr>
<tr>
<td>கும்பம் 4<br>அர்த்தாஷ்டம குரு<br>வண்டி வாகனம் கவனம்,<br>தாய் - வீடு வாசல் -<br>கவனம்<br>மனகுழப்பம் தவிர்க்கவும்</td>
<td colspan="2" rowspan="2">மேஷ ராசியிலிருந்து<br>ரிஷப ராசிக்கு<br>குருபெயர்ச்சி 1.5.2024<br><br>ஸ்ரீ குரு பகவான்<br>மேஷ ராசியிலிருந்து<br>ரிஷப ராசிக்கு<br>பெயர்ச்சி பலன்கள்<br><br><u>அனுகூலம் பெறும் ராசிகள்</u><br>மேஷம், கடகம், கன்னி,<br>விருட்சிகம், மகரம்<br><br><u>பரிகாரம் செய்ய வேண்டிய<br>ராசிகள்</u><br>ரிஷபம், மிதுனம், சிம்மம், துலாம்,<br>தனுசு, கும்பம், மீனம்</td>
<td>கடகம் 11<br>லாப குரு தொழில்<br>குடும்பத்தில் லாபம்</td>
</tr>
<tr>
<td>மகரம் 5<br>பஞ்சம குரு<br>கல்வி -வித்யை<br>கலைதுறை, கணிணி<br>துறை போன்றவை<br>நன்மை</td>
<td>சிம்மம் 10<br>புத்தில் குரு<br>பதவி மற்றும்<br>வியாபாரம் கவனம்</td>
</tr>
<tr>
<td>6<br>தனுசு<br>ஷஷ்டம குரு<br>உடல் உபாதை மற்றும்<br>வழக்கு, கேஸ், ஷேர்<br>மார்க்கெட் போன்றவை<br>கவனம் தேவை</td>
<td>7<br>விருச்சிகம்<br>சப்தம குரு<br>சுபம்<br>நன்மை</td>
<td>8<br>துலாம்<br>அஷ்டமகுரு<br>உடல் நிலையில்<br>கவனம் தேவை</td>
<td>9<br>கன்னி<br>பாக்கிய குரு நன்மை</td>
</tr>
</table>

**குரு பகவான் மேஷ ராசியில் இருந்து ரிஷப ராசிக்கு பெயரும் போது
ரிஷப ராசிக்கு உரிய நதியான நர்மதா நதியில்**

**ஸ்ரீ குரோதி வருடம்**

***சித்திரை மாதம் 18ஆம் தேதி (1-5-2024) புதன்கிழமை முதல்***

***சித்திரை மாதம் 29ஆம் தேதி (12-5-2024 ) ஞாயிற்றுக்கிழமை வரை***

குரு பகவான் வாசம் செய்வார். குரு பெயர்ச்சி தொடங்கி இந்த 12 நாட்களும்
ஆதி புஷ்கரம் என்று கொண்டாடப்படுகின்றது.

புஷ்கர காலங்களில் அந்தந்த நதிகளில் நீராடி தானம் செய்வதும் மற்றைய நாட்களில் செய்யும் தானங்களைவிட பன்மடங்கு புண்ணியத்தை நல்கும் - புஷ்கர காலங்களில் வரையறுக்கப்பட்ட நதிகளில் பித்ருக்களுக்கு தர்ப்பணம், திதி கொடுத்து முன்னோர்களை வழிபடுவது பித்ருசாபம் நீங்க வழி நல்கும். கௌரி பூஜை, கங்கை பூஜை, பிரகஸ்பதி பூஜை, தம்பதி பூஜை செய்வதும் வாழ்வில் சகல நன்மைகளும் கிடைக்க வழி வகுக்கும்.

இத்தகைய சமயங்களில் வேத வித்துக்களுக்கும், பண்டிதர்களுக்கும், ஏனையோருக்கும் அளிக்கப்படும் தக்ஷிணை, சமாராதனை, அன்னதானம், வஸ்திரதானம் போன்ற தானங்கள் சிறந்த புண்ணிய பலன்களை அளிப்பதாக கருதப்படுகிறது.

# நர்மதை மஹாத்மியம்



சிவபெருமானின் உக்கிர தவத்தின் வெளிப்பாடாகவும், உள்ளத்தின் தாபத்தின் உள்பாடாகவும் ஒருங்கே புராணங்களில் போற்றப்படும் நர்மதை - கங்கையைவிடவும் புராதனமாதாகப் கருதப்படும் நர்மதை - பாரத நதிகளில் இருக்கும் ஒரு சில படித்துறைகள் ப்ராசீனமானதாகவும், புண்ணியப்படித்துறைகளாகவும் கருதப்படும் போது, மத்சய புராணம் கூறியவாகில் 'தான் பாயும் வழி நெடுக இரு கரைகளுமே முழுக்க முழுக்க புண்ணியக்கரைகளாவே கருதப்படும்' நர்மதை – 'ஏனைய புண்ணிய நதிகளில் நீராடினால் புண்ணிய லோகமான மோக்ஷம் கிட்டும்; ஆனால், நர்மதையைப் பார்த்த மாத்திரத்தில், நினைத்த மாத்திரத்தில் புண்ணியம் கிட்டும், மோக்ஷமும் அறுதி' என்ற நம்பிக்கையால் 'முக்திதயாநி' என்றறைழைக்கப்படும் நர்மதை;

நானூறுக்கும் மேற்பட்ட தீர்த்தக்கட்டங்களைக்கொண்ட நர்மதை நதி மத்யப்ரதேசத்தில் அமர்கந்தக் என்ற இடத்தில உற்பத்தியாகிறது - சோன்முட பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இயற்கையெழில் கொஞ்சும் பகுதியிலிருந்து இந்நதி பிரவகிக்கின்றாள். அமர்க்கந்தக்கில் மாய்க்கள் மலைகளில் உற்பத்தியாகும் நர்மதை ஏறக்குறைய 900 சொச்ச மைல்களைக் கடந்து குஜராத்தில் பரூச் மாவட்டத்தில் கடலில் சங்கமிக்கிறாள்.

நர்மதையின் அருவியில் அடித்துவரப்படும் கற்கள், அருவிச்சுனையில் காலம் காலமாய் உருட்டப்பட்டு, புறம் மிருதுவாக்கப்பட்டு, லிங்க வடிவாக இருப்பதால், அவை பாணலிங்கங்கள் என அறியப்படுகின்றன - அவற்றில் ஒன்றுதான், தஞ்சைப் ப்ரகதீஸ்வரர் ஆலயத்தில் மூலவராக விளங்குகிறார்.

பிருகு மகரிஷி, கபில முனி, மாண்டவ மகரிஷி, மார்க்கண்டேய ரிஷி இந்நதி தீரத்தில் வாசம் செய்து தவமேற்கொண்டு நற்கதியடைந்தார்கள் என்பது புராணம். ஆதி சங்கரர் தனது குருவான கோவிந்த பகவத்பாதாவை இந்நதி தீரத்தில்தான் சந்தித்தார் என்பதும் ஒரு விஷேஷம்.



உபதேசம் பெறுவதற்காக, ஒரு தேர்ந்த குருவை நாடி, ஆதி சங்கரர், காலடியிலிருந்து வடக்கு முகமாக இரண்டு மாத காலமாக பயணித்து நர்மதை நதி தீரத்திற்கு வந்தார். மஹா யோகியான கோவிந்த பகவத்பாதாள் கடும் நிஷ்ட்டையில் அமர்ந்திருப்பதைக்கண்ணுற்றார். நர்மதை வெள்ளமாக பிரவாகித்தபோது, அதன் கரையில் தவம் மேற்கொண்டிருந்த அவருடைய நிஷ்ட்டைக்கு ஊறு விளைந்துவிடக்கூடாதே என, தன் தபோ வலிமையால் அவ்வெள்ளத்தை தன் கமண்டலத்தில் பிடித்து சற்று தள்ளி பிரவாகத்தில் அதை மீண்டும் சேர்த்துக் கொண்டிருந்தார். தவத்தினூடே, ஆதி சங்கரரின் சேவையையும், அவர் ஆதியோகியான சிவனே ஆதி சங்கரராக அவதரித்திருப்பதையும் ஞானக்கண்ணில் கண்டு தெளிவடைந்த அவர், சங்கரரின் கோரிக்கையை ஏற்று, தீக்ஷை அளித்து. தன் சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு சிறப்பித்தார்.

***சிவ புராணம் (1.12) நர்மதையை 24 பக்ஷ நதி*** என்று போற்றிப் புகழ்கிறது. ஏனைய புண்ணிய நதிகளுக்கு, பிரத்யேக புண்ணிய காலம் என்று ஓரிரு பக்ஷங்கள் சாஸ்வதமாயிருக்கும் பட்சத்தில், நர்மதைக்கு மட்டும், 'ஆண்டின் 24 பக்ஷங்களும் புண்ணிய காலமே என்று அறுதியளிக்கப்பட்டிருக்கிறது' என்று அது நர்மதையைக் கொண்டாடுகிறது.

சர்வேசன் திரிபுரம் எரித்த திருவிளையாடலுக்குப் பின்னர், எரிந்து சாம்பலான இரு பர்வதங்களைத் தவிர்த்து எஞ்சிய மூன்றாவது இரு துகளாகி, ஒன்று ஸ்ரீசைல மலையாகவும், இன்னொன்று அமரகண்டகா மலையாகவும் பூமியில் விழுந்தன. இரண்டாவதே (அமரகண்டகா) நர்மதையின் பிறப்பிடமாக திகழ்கிறது.



சிவபெருமானின் கடும் தவத்தின் வெம்மையில் அவருடையதிருமேனியிலிருந்து வியர்வை ஆறாக வெளிப்போந்து அவர் தவமிருந்த மலையில், அமர்கண்ட்டக்கில் குளமாக தேங்கி, பின்னர் கொள்ளிடமும் பொறாமல், வழிந்து நர்மதையாக ஓடி நதியாக கடலில் சங்கமித்தாள் என்றும் கூறுவர். ஈஸ்வரனின் மேனியிலிருந்து பிறந்ததால் தெய்வீக கவர்ச்சி கொண்ட இவளை மணக்க தேவர்கள் விருப்பமுற்றபோதெல்லாம், அவள் விளையாட்டாய் மறைந்து மீண்டும் தோன்றி லீலைகள் புரிந்ததால், இன்றும் அவள் வழியெங்கும் மலை முகடுகளில், பள்ளத்தாக்குகளில் மறைந்து, மீண்டும் தோன்றி விந்தைப்பல புரிகிறாள்.

சிவன்பாற் அவள் அடைந்த சரணாகதியால் மகிழ்ந்த அவருடைய அனுக்ரஹத்தால் தான் தேவி நர்மதை கற்பனைகளையும் தாண்டி புண்ணிய ஜீவ நதியாக இருப்பதன் காரணம் என்றும் கூறுவர்.

தாபத்தின் வெளிப்பாடாக இன்னொரு கர்ண பரம்பரைக்கதையும் இந்நதியின் பூர்வீகத்தை கொண்டாடும் வகையில் சொல்லப்படுகிறது. மேகலான் என்ற அரசனுக்குப் பிறந்த நர்மதை, கோணபத்ரன் என்ற வாலிபனிடம் ஒருதலைக்காதல் கொண்டாள். அவனுக்கோ 'கங்கா' என்ற பெண்ணின்பாற் மையல். மன்னனின் கட்டளையை மீறி நர்மதையைப் புறக்கணிக்க துணிவு எழாமல், கங்கையும், கோனபத்ரனும் ஒரு இளம் துறவியை நாடி, தங்கள் விருப்பத்தையும் நிறைவேற்றி தேவி நர்மதாவிற்கும் எந்த தீங்கும் நேராமல் அவளையும் அனுகிரஹிக்கவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டனர்.

அத்துறவி இவர்களுக்காக நர்மதையை தனக்கு மணமுடிக்க, பெண் கேட்டு நாடகமாடி, அரசன் அதற்கு மறுப்பு சொல்ல, அவர், மேகலானை பர்வதமாக மாறச் சாபம் அளித்ததாக கூறுவர். கங்காவையும், கோணாபத்திரனையும் நதிகளாக மாறி சங்கமித்து சுகிக்குமாறும், தேவி நர்மதையை கன்னி நதியாக கல்பகாலமெல்லாம் தழைக்கட்டும் என ஆசீர்வதிக்க, அவர்களும் அவ்வாறே ஜீவ முக்தியடைந்தனர்.

சோன்மோடா பள்ளத்தாக்கில் கோயா நதி உற்பத்தியாகி, வடகிழக்காக ஓடி, பாட்டனாவிற்கு அருகில் கங்கையுடன் கலக்கிறது. மைக்காலா பீடபூமியில் தோன்றும் நர்மதை தென்மேற்காக ஓடி கடலில் கலக்கிறது.

பத்ம புராணம், ஸ்கந்த புராணம், லிங்க புராணம், ப்ரஹ்மாண்ட புராணம், மத்சய புராணம், சோமதேவரின் 'கதா சரித சாகரம்' - இவற்றில் நர்மதையின் புகழ் பரவலாக காணக்கிடைக்கிறது. நர்மதை மகாபாரதத்திலும், வஷிஷ்ட சம்ஹிதையிலும், சத்பாத ப்ராஹ்மணத்திலும் கொண்டாடப்பட்டவள்.

ஹிந்து தர்மத்தையும் தாண்டி பௌத்த மதப்பிரிவுகளிலும் நர்மதை கொண்டாடப்படுகிறாள் - மஹாயான பிரஞ்ஞானபரமமித சூத்திரங்கள்; மஞ்சுஸ்ரீ மூலகல்ப - வஜ்ராயன பௌத்தம்.

## நர்மதையின் கூழாங்கற்கள் ஈஸ்வர சொரூபத்தையடைகின்றன என்பது சொல் வழக்கு.

காலம் காலமாக ஜீவர்கள் தன்னில் நீராடி தம் தம் பாவங்களைக் கழுவிப் போக்கிக்கொள்வதின் விளைவாக, கங்கை நதி தன்னில் சேரும் பாவக்கருமையை போக்க, பசுவின் வடிவில் அவ்வப்போது நர்மதை நதிக்கு வந்து, நீராடி, தன் பாற் சேர்ந்த பாவத்தை போக்கிக்கொள்கிறாள் என்பது ஐதீகம்.

# நர்மதா நதிப் பரிக்ரமம்

கிரிவலம், ஊர்வலம் போன்ற பல விரத செயல்கள் பல இடங்களில் நடப்பினும், உலகிலேயே தனித்துவமான **நதிவலம்** நடைபெறுவது இந்த **நர்மதைக்கு மட்டும்தான். மார்க்கண்டேய மகரிஷியால்** துவக்கப்பட்ட இந்த பரிக்ரமம், உலகின் தொன்மையான விரதமாகும் - மிக நீண்டதும், மிகக்கடுமையானதுமாகும். வழிநெடுக கரையெல்லாம் புண்ணிய ஸ்தலங்களே நர்மதைக்கு. கிட்டத்தட்ட 2600 கிலோமீட்டர் தூர பாதையில் நடந்தே நர்மதையை வலம் வரும் அற்புத விரதத்திற்கு 'நர்மதா பரிக்ரமா" என்ற நாமம். கையில் செலவுக்கு பணம் எடுத்துக்கொள்ளாமல், வழியில் பசியாற பிட்சை எடுத்து, கிடைத்த இடத்தில் நித்திரைகொண்டு, நர்மதையிலேயே நீராடி செய்யவேண்டிய விரதமிது - 1200 நாட்களில் முடிக்கவேண்டிய நிர்பந்தமும் உண்டு. பரிக்ரமாவின் போது எச்சமயத்திலும் நர்மதையைக் கடந்துவிடக்கூடாது என்பதும் ஒரு முக்கிய நிபந்தனை.

## நர்மதையின் கரையில் இருக்கும் அதிமுக்கிய வழிபாட்டுத்தலங்கள்

- அமரகண்டக் (ஈஸ்வரனின் தொண்டை) - இது தீர்த்தங்களின் அரசி என்றும் கருதப்படுகிறது) – ஜோதிர்லிங்கம் - கர்ப்பகிரகம் ஓம்கார வடிவில் அமைந்திருப்பது அப்பூர்வமான ஒன்று.
- நர்மதா உதகம் (நர்மதா தேவியின் கற்சிலை)
- நேமாவார் சித்திதேஸ்வரர் கோயில்
- யோகினி கோயில்கள் (அறுபத்தி நான்கு யோகினிகள்)
- இருபத்தி நாலு அவதாரக் கோயில்
- போஜ்புர் சிவன் கோயில்
- பரூச் நகரில் இருக்கும் ப்ருகு மகரிஷி கோயில்
- ஸ்ரீராம் ஜானகி கோயில்
- வாங்கேஸ்வரர் கோயில்
- குரு கோரக்கநாதர் கோயில்
- கார்த்திகேய கோயில்
- குப்தேஸ்வர் மஹாதேவ கோயில் (ஆசீர்கர்)

## ஓம்காரேஷ்வர் க்ஷேத்ரத் தலங்கள்

- ஓம்காரேஸ்வரர் கோயில்
- மஹேஸ்வரர் கோயில்
- காலேஷ்வர் கோவில்
- அம்பாஜி கோவில்
- பாணேஷ்வர் கோவில்
- மாண்டூக்ய ரிஷி தபோவன்



**புஷ்கர விழாத் தலம்**

ஸ்ரீ கஜானன் மகராஜ் சன்ஸ்தான்,
ஓம்காரேஷ்வர்
இந்தோர் வழி, மத்திய பிரதேசம்

**ஆர்த்தி நடைபெறும் இடம் :**
பிரம்மபுரி காட்
ஸ்ரீ கஜானன் மகராஜ் சன்ஸ்தான் அருகில்

**ஸ்கந்த புராணத்தில் ரேவா காண்டத்தில் ரேவா மஹாத்ம்யய வர்ணனம் (2 / 54-58) இல்**

**ஶ்ரீ மார்க்கண்டேய மகரிஷி கூறுவதாவது...**

# रेवामाहात्म्यवर्णनम्

एताश्चान्याश्चसरितःसर्वपापहराःस्मृताः

किं_तु ते कारणं तात! वक्ष्यामि नृपसत्तम! ।

समुद्राः सरितः सर्वाः कल्पे कल्पे क्षयं गताः ॥54॥

***புண்ணிய நதிகள் எல்லாம் பாவநாசினிகள் என்றறியப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு கல்பத்தின் முடிவிலும், இந்நதிகளும் மறைந்துபடுகின்றன.***

सप्तकल्पक्षये क्षीणे न मृता तेन नर्मदा ।

नर्मदैकैव राजेन्द्र ! परंतिष्ठेत्सरिद्वरा ॥55॥

***ஏழு கல்பங்கள் முடிந்துவிட்டன இப்பிரளயத்தில். எனினும், நர்மதை ஒருபோதும் மறைந்ததில்லை - அவள் கல்பங்களையும் தாண்டி ஜீவித்திருக்கும் ஜீவநதி.***

तोयपूर्णा महाभाग! मुनिसङ्घैरभिष्टुता ।

गङ्गाद्या सरितश्चान्याः कल्पे कल्पे क्षयं गताः ॥56॥

***புண்ணியம் மட்டுமே நிறை நீர்கொண்ட நர்மதை முனிபுங்கவர்கள் அனைவராலும் போற்றப்பட்டவள். கங்கை கூட ஒவ்வொரு கல்பத்திலும் மறைந்து பின்னர் மீண்டும் தோன்றுபவள், ஏனைய நதிகளைப்போலவே; (நர்மதையைத்தவிர்த்து)!***

एषा देवी पुरा दृष्टा तेन वक्ष्यामि तेऽनघ ॥57॥

आश्चर्यभूता राजेन्द्र! त्रिषु लोकेषु विश्रुता ॥58॥

***இந்த தேவி இதற்கு முன் இருந்த கல்பங்களிலும் ஆரம்பம்முதல் இறுதிவரை இருந்தவள். மூவுலகிலும் நன்கு அறியப்பட்டவள்.***

**ஓம்காரேஸ்வரர் ஜோதிர்லிங்கம்** ஒரு அசாதாரணமான ஜோதிர்லிங்கம் - பன்னிரெண்டு ஜோதிர்லிங்கங்களில் ஏனையவை கிழக்கு முகமாக அமைந்து, காட்சி கொடுக்கையில், இவர் மட்டும் தெற்கு முகமாக, **தக்ஷிண ஜோதிர்லிங்கமாக** காட்சிகொடுப்பதும் சிறப்பானது.

ஓம்காரேஸ்வரர் கோவிலினுள்ளே உறையும் **நாகசந்தரேஸ்வர மூர்த்தியும்** அரிதான ஒன்றாகும். சிவனும், பார்வதியும் ஒன்றாக பத்துதலை நாக ஆசனத்தில் அமர்ந்திருக்கும் திருக்கோலம், வருடத்திற்கு ஒரு நாள், நாக பஞ்சமி தினத்தன்று மட்டுமே திறந்து பூசனை மேற்கொண்டு நமக்கு காட்சிகொடுப்பதும் ஒரு சிறப்பு. ஏனைய தினங்களில் அச்சன்னதி பூட்டியே இருக்கும்.



## ஆசீர்கர் குப்தேஸ்வர் மஹாதேவ் கோயில்



நர்மதை நதி தீரத்தில் இருக்கும் **ஆசீர்கர் குப்தேஸ்வர் மஹாதேவ கோயிலில்** தினம்தோறும் காலையில் பூமியின் நித்தய வாசியான **அஸ்வத்தாமன்**, தினமும் உஷத்காலத்தில் கோயிலுக்கு வந்து மூலவரை பூஜை செய்வதாக ஐதீகம். குப்தேஸ்வர் மஹாதேவ் கோயிலைச்சுற்றியுள்ள வனப்பகுதிகளில் இன்றும் அஸ்வத்தாமன் வாழ்ந்துகொண்டிருப்பதாகவும் நம்பிக்கை உலவுகிறது. இன்றும், அவ்வப்போது அப்பிராந்தியத்தில் பூர்வகுடி மக்கள், சிரஞ்சீவியான அஸ்வத்தாமனை நேரில் காட்டுப்பகுதிகளில் காண்கிறார்கள் என்று நம்பபடுகிறது.

ஆண்டுதோறும் மாசி மாதம் சுக்ல பட்ச சப்தமியில் **'நர்மதா ஜயந்தியும்'** கொண்டாடப்படுகிறது. - படகுகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து நதிப்ரவாகம் எங்கெங்கினும் படகுச்சங்கிலியாய், படகுகள் முழுக்க தீபங்களால் நிறைத்து கொண்டாடப்படும் **'தீப்தான்'** என்ற விளக்கு வழிபாடு கண்கொள்ளாக் காட்சியாகும்.

# சமீப காலத்திய ஏனைய புஷ்கர விழாக்கள்



## கிருஷ்ணா நதி புஷ்கர் - கன்னி ராசி

2016 ஆம் ஆண்டு கிருஷ்ணாவிலும், நமது காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் முன்னிலையில் புஷ்கரம் வெகு சிறப்பாக நடந்தேறியது



## காவிரி நதி புஷ்கர் - துலா ராசி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகதகுரு சங்கராச்சாரியார்கள் அருளாணைப்படியும், அவர்கள் முன்னிலையிலும், ஆதீன கர்த்தர், மடாதிபதிகள் ஒத்துழைப்புடனும், அவர்கள் முன்னிலையிலும் காவேரி புஷ்கரம் காவிரி பாயும் எல்லா இடங்களிலும் 2017 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. குறிப்பாக மயிலாடுதுறை, அல்லூர் போன்ற இடங்களில் 13-9-27 முதல் 12 நாட்களுக்கு வெகு சிறப்பாக நடந்தேறியது.



## தாமிரபரணி புஷ்கர் - விருச்சக ராசி

தாமிரபரணி புஷ்கரம் குறுக்குத்துறை முருகன் கோவில் படித்துறையில் 12-10-18 ல் இருந்து 23-10-18 வரை ஆதி புஷ்கரம் ஆச்சார்யாள் அனுக்ரஹத்துடன் கொண்டாடப்பட்டது



## பிரம்மபுத்ரா நதி புஷ்கர் - தனுசு ராசி

ஆச்சார்யாள் கிருபையுடன் 2019 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 23ஆம் தேதி முதல் 12 நாட்களுக்கு முதன்முறையாக அஸ்ஸாமில் பிரம்மபுத்ர புஷ்கரவாஹினி கௌஹாத்தியில் விமரிசையாக கொண்டாடப்பட்டது.



## துங்கபத்ரா புஷ்கர் - மகர ராசி

நவம்பர், 20, 2020 அன்று முதல் 12 நாட்களுக்கு துங்க பத்ரா நதியில் கர்நாடக மாநிலம் ஆனேகுந்தியில் கொண்டாடப்பட்டது.



## பீமா/சந்திரபாக புஷ்கர் - கும்பராசி

நவம்பர், 21, 2021 முதல் 12 நாட்களுக்கு பண்டரிபுரம், மஹாராஷ்டிராவில் வெகு விமர்ச்சையாக ஆச்சார்யாள் அனுக்ரஹத்துடன் கொண்டாடப்பட்டது



## பிரணிதா புஷ்கர் - மீன ராசி

12-4-2022 முதல் 12 நாட்களுக்கு தெலுங்கானா மாநிலம் காளேஸ்வரத்தில் வெகு விமர்ச்சையாக ஆச்சார்யாள் அனுக்ரஹத்துடன் கொண்டாடப்பட்டது

## கங்கா புஷ்கர்

22-4-2023 முதல் 3-5-2023 வரை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகதகுரு சங்கராச்சாரியார்கள் அருளாணைப்படியும், ஆதீன கர்த்தர், மடாதிபதிகள் ஒத்துழைப்புடனும் புஷ்கரம் உத்திரகாண்டு மாநிலம் ஹரித்வாரில் வெகு சிறப்பாக நடந்தேறியது









## புஷ்கர பூமி ஓம்காரேஷ்வரின் புண்ணிய ஸ்தலங்கள்




ஓம்காரேஷ்வரர்



மாண்டுக்ய ரிஷி தவமிருந்த இடம்



காலேஷ்வரர் கோவில்



அம்பாஜி கோவில்




பாணேஷ்வரர் கோவில்



நதி தீரம்

# புஷ்கர நதி மாதா நர்மதையின் ஜென்ம பூமியில் புண்ணிய க்ஷேத்திரங்கள்



த்ரிமுகி கோவில்



நர்மதா குண்ட்



ஸ்ரீ யந்த்ர கோவில்



நர்மதா குண்ட்



ஓம்காரேஸ்வரர் மண்டபம்



கோவிலிலிருந்து...



சஹஸ்ரதாரா



மாண்டவ ரிஷி தவச்சாலை



கபில முனி நீர்வீழ்ச்சி



அமர்கண்ட் கோவில்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள், ஆதீனகர்த்தாக்கள், மடாதிபதிகளின் ஆசிகளுடன், ஆளுநர், முதன் மந்திரி, அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியர், அரசாங்க உயர் அதிகாரிகள் எல்லோருடைய மிகுந்த ஒத்துழைப்போடும் நடைபெறும் இந்த *நர்மதா புஷ்கர விழாவில்* பங்கு கொண்டு நதியில் நீராடி அவ்வமயம் நடைபெறும் பரிஹார ஹோமங்களில் கலந்து கொண்டு அனைத்து ஆன்மீக நிகழ்வுகளில் பங்கு கொண்டு பகவத் கிருபையையும், நர்மதை மாதாவின் கிருபையையும், பரமாச்சார்யாள் ஆதி சங்கரரின் ஆசியையும், அருளையும் பெற்று, எல்லாம் வல்ல இறையின் கருணை கடாட்சத்திற்கும் பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தினமும் காலையில் சதுர் வேத பாராயணம், மகா ருத்ர ஜபம், சண்டி பாராயணம், காம்யார்த்த ஹோமங்கள் நடைபெறும். பிறகு கலச தீர்த்தங்கள் மதியம் *நர்மதா* நதியில் பிரம்மபுரி காட் சேர்க்கப்பட்டு புஷ்கார ஸ்நானம் நடைபெறும். *மாலை நதி ஆர்த்தி, விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம், லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ருத்ர கிராம அர்ச்சனை, நடைபெறும்.*



# தானங்கள்

வேத பாரயணர்களுக்கும், வேத பண்டிதர்களுக்கும் யக்ஞங்களின் போது அளிக்கப்படும் தக்ஷிணை, சமாராதனை, அன்னதானம், மற்றும் வஸ்திரதானம் போன்றவை வெகு சிலாக்கியமானவையாக கருதப்படுகிறது. மேற்கண்ட அனைத்து வைதீக கார்யார்த்தங்களிலும் பக்தர்கள் தாராளமாக நன்கொடை அளித்தும், மேற்கண்ட தானங்களை செய்தும் கலந்துகொண்டு, வேத வித்துக்களின் ஆசீர்வாதங்களை பெற்று புண்ணியம் தேடிக்கொள்ள பிரார்த்திக்கிறோம்.

| நாள் | தேவதை | தானங்கள் |
|---|---|---|
| மே 1 | மித்ரன் | தங்கம், வெள்ளி, தானியம், பூமி |
| மே 2 | அர்யமா | வஸ்திரம், உப்பு, பசு, ரத்தினம் |
| மே 3 | திவஸ்தா | வெல்லம், கறிகாய்கள், குதிரை, பழங்கள், வண்டி |
| மே 4 | சூரியன் | நெய், எண்ணை, தேன், பால் |
| மே 5 | விலஸ்வான் | தான்ய வண்டி, எருமை, காளை, ஹலம் |
| மே 6 | அருணா | மருந்து, கற்பூரம், கஸ்தூரி, சந்தனம், வாசனை திரவியம் |
| மே 7 | பகவான் | வீடு, பீடம், படுக்கை, நாற்காலி, கிழங்கு, இஞ்சி |
| மே 8 | அம்சுமான் | சந்தனக்கட்டை, புஷ்பம், முறம் |
| மே 9 | இந்திரன் | சிரார்த்தபிண்டம், கன்னி, சௌபாக்கியத்ரவ்யம், மஞ்சள், கங்கணம் |
| மே 10 | பர்ஜன்யன் | சாளக்கிராமம், புத்தகங்கள் |
| மே 11 | விஷ்ணு | யானை, குதிரை |
| மே 12 | ப்ரஹ்மா | எள், புத்தகங்கள் , பேனா, பென்சில் |

# நர்மதா நதி புஷ்கரம் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| ஏப்ரல் 30 | • ***காலை 8 மணிக்கு*** மங்கள இசையுடன்<br>• ஓம்காரேஷ்வர் அமலேஸ்வரர், ஆதி சங்கரர் குகை, மேலும் அர்ச்சா மூர்த்தியிடமிருந்து அனுக்ஞையைப் பெறுதல்.<br>• ***மாலை 5 மணிக்கு*** சப்தநதிகளை குடங்களில் ஆவாஹனம் செய்து சப்த நதி பூஜைசெய்து, புண்ணிய தீர்த்தத்துடன் கஜானன் ஆசிரமம் ஏகுதல். |
| மே 1 | • ***காலை 6 மணிக்கு*** மங்கள இசை - துவஜரோகணம் - பெஜாவர் ஸ்வாமிஜி (உடுப்பி மடம்) தலைமையில் ஓம்காரேஷ்வர் புஷ்கர கொடியேற்றம் - கணபதி பூஜை<br>• ***காலை 7 மணிக்கு*** நர்மதையில் கலச தீர்த்த சமர்ப்பணம், புஷ்கர ஸ்நானம்<br>• ***காலை 9 மணிக்கு*** கணபதி ஹோமம்<br>• ***காலை 11 மணிக்கு*** பூர்ணாஹுதி, தீபாரதனை, தீர்த்தவாரி |
| மே 2 | தோஷம் விலக்கும் நவகிரஹ ஹோமம் |
| மே 3 | துர்கா ஸ்வரூப ஹோமம், ஸ்வயம்வர காலா பார்வதி ஹோமம் - கல்யாணங்கள் கைகூட |
| மே 4 | ஸ்ரீ ஸ்வர்ணாகர்ஷண ஸ்ரீ பைரவ ஹோமம், வடுக பூஜா - வியாபாரம் செழிக்க |
| மே 5 | ஸ்ரீ மகா சுதர்ஷன ஹோமம் - திருஷ்டி அகல, நோய்கள் விலக. |
| மே 6 | ஸ்ரீ சந்தன கோபாலகிருஷ்ண ஹோமம் - ஸ்ரீ புத்ர காமேஷ்டி யாகம் - ஸ்ரீ ஷண்முக ஹோமம் - புத்திர பாக்கியத்திற்கு |
| மே 7 | ஸ்ரீ ஹயக்ரீவ ஹோமம், ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஹோமம், ஸ்ரீ வித்யா, மகா சரஸ்வதி ஹோமமம் - கல்வி அபிவிருத்திக்கு. |
| மே 8 | ஸ்ரீ தன்வந்திரி ஹோமம் - வியாதிகள் நீங்கி குணமாக |
| மே 9 | ஸ்ரீ குபேர மஹாலக்ஷ்மி ஹோமம் - செல்வத்திற்கு |
| மே 10 | ஸ்ரீ சண்டி ஹோமம் லோக க்ஷேமத்திற்கும், ஸ்நேக சந்துஷ்டிக்கும் |
| மே 11 | ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம் அமிர்த ம்ருத்யுஞ்ஜய ஹோமம் லோக க்ஷேமத்திற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும். |
| மே 12 | ஸ்ரீ ஆயுஷ்ய ஹோமம், நக்ஷத்திர ஹோமம் நீண்ட ஆயுளுக்கும், உடல் நலனுக்கும். |

# நர்மதா புஷ்கரம் - ஓம்காரேஷ்வர்

## நர்மதா புஷ்கரம்

### ஸ்ரீ குரோதி வருடம்

சித்திரை மாதம் 18ஆம் தேதி (1-5-2024) புதன்கிழமை முதல்

சித்திரை மாதம் 29ஆம் தேதி (12-5-2024 ) ஞாயிற்றுக்கிழமை வரை

### ஹோமம் நடைபெறும் இடம் :

ஓம்காரம்ஸ்ரீ கஜானன் மகராஜ் ஆஸ்ரமம், பக்திநிவாஸ் மம்லேஷ்வர் சாலை,
மத்திய பிரதேசம்

### ஆர்த்தி நடைபெறும் இடம் :

பிரம்மபுரி (நர்மதை நதிக்கரை), ஓம்காரேஷ்வர், மத்திய பிரதேசம் 450554



**<u>பரிகார யாகங்கள், ஹோமங்கள்</u>**

**ஸ்ரீ சிதம்பரம் தியாகப்பா தீக்ஷிதர் *(98426 94431),***

**ஸ்ரீசிவராம தீக்ஷிதர் *(9443320379)***

**தலைமையில் நடைபெறும்.**

திதி, ஸ்ரார்த்த சங்கல்பம், தில தர்ப்பணம் செய்தல், கௌரி, பிரகஸ்பதி, தம்பதி பூஜா:

**ஸ்ரீ ஸ்வாதிஷ் கனபாடிகள் (தமிழில்) *80728 92359***

**பண்டிட் அசோக் துபே தீர்த்த *Priest 98936 10422***

ஓம்காரேஷ்வர் ஜோதிர்லிங்க கோவில்

**<u>நாதஸ்வர குழு</u>**

நாதஸ்வர கலை செல்வன் :
இலுப்பபட்டு *E.S.S.*அரவிந்த்
நாதஸ்வர கலை செல்வன் :
சிதம்பரம் *V.S.*ஐயப்பன்
தவில் இசை மாமுரசு :
*E.S.*இலுப்பபட்டு சங்கர்
தவில் சுடர் ஒளி :
திருபுன்கூர் *S.*சம்பத்
தாளம் : *S.*வாசு

| ஒவ்வொரு நாளும் விழா நிகழ்ச்சி நிரல் | |
|---|---|
| 6.00 am | நாதஸ்வரம் இசை |
| 8.00 am | மஹாந்யாஸ ருத்ர, வேத பாராயணம் |
| 10.00 am | யாகங்கள், ஹோமங்கள் |
| 11.00 am | பூர்ணாஹுதி |
| 11.30 am | மாதா நர்மதா நதி தீர்த்தவாரி |
| 6.00 am | கலை நிகழ்ச்சிகள் |
| 7.00 pm | நர்மதா புஷ்கர ஆரத்தி |

## ஸ்தல விசேஷங்கள் ...



லிங்கார்ச்சன பூஜா
(1325 பாண லிங்கங்கள்)



நர்மதா நதி ஆரத்தி







# விழாக் குழு

| | |
|---|---|
| முதன்மை அமைப்பாளர் | திருமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யன் – 9840053289<br>திரு VC சுப்ரமண்யன் – 99400 53289<br>ஸ்ரீ மஹாலக்ஷ்மி சேரிட்டபிள் டிரஸ்ட், சென்னை |
| ஒருங்கிணைப்பு<br>ஓம்காரேஷ்வர் | திருமதி ரமா சுப்பிரமணியன் – 81449 28666<br>நூலாசிரியர் தமிழாக்கம் -<br>"ஸ்ரீ கஜானன் மகராஜ் குருசரித்திரம்"<br>திரு. அஞ்சல் துபே, 7247503637, ஓம்கரேஷ்வர் கோவில் |
| உறுப்பினர்கள் | திரு ரமேஷ் சேதுராமன் - சென்னை - 9444008790<br>திரு கே ஆர் வெங்கடேசன் – சென்னை- 9840127415<br>திரு சுந்தர் ராமன் - மும்பை - 9820059288<br>திரு பட்டாபிராமன் - சென்னை – 9962019172<br>திருமதி சுதா சுந்தரவரதன் – பெங்களூரு – 9663879295 |
| வேதபாராயணம்<br>ஒருங்கிணைப்பு | திரு ஜே சந்திரமௌலி – 9940080033<br>ஆடிட்டர், சிவார்ப்பணம் டிரஸ்ட், சென்னை. |
| நிகழ்ச்சி நிரல் பொறுப்பு | திரு வலசை கே ஜெயராமன், சென்னை – 9444279696<br>திரு. பட்டாபிராமன், சென்னை – 9962019172<br>திருமதி சுதா சுந்தரவரதன், பெங்களூரு – 9663879295 |







**உங்கள் வருகையை அன்புடன் எதிர்நோக்கும்.**

ஸ்ரீ மஹாலக்ஷ்மி சாரிட்டபிள் டிரஸ்ட்

சென்னை - 17